உ

சிவமயம்

# பிரதோஷ விரத மகிமை



தயாரிப்பு:

க. சி. குலரத்தினம்

வெளியிடுவோர்:

சிவநெறிப்புரவலர் சமாதான நீதவான்

திரு. க. கனகராசா அவர்கள்

1977

உ

சிவமயம்

# பிரதோஷ விரத மகிமை

தயாரிப்பு :

**க. சி. குலரத்தினம்**

★

வெளியீடுவோர் :

சிவநெறிப்புரவலர், சமாதான நீதவான்

**திரு. க. கனகராசா அவர்கள்**

★

**1982**

# பிரதோஷ விரத மகிமை

பிரதோஷம் என்பது முற்பிறப்பிற்செய்த குற்ற நீக்கமாகும். பிரதோஷ விரதம் சிவ பெருமானுக்குரிய விரதங்களுள் ஒன்று. மாதந்தோறும் உண்டாகின்ற சுக்கிலபட்சம் என்னும் வளர்பிறைக் காலத்திலும், கிருஷ்ண பட்சம் எனப்படும் தேய்பிறைக் காலத்திலும் உண்டாகின்ற பதின்மூன்ரும் நாளைப் பிர தோஷ காலம் என்பர்.

தேவர்களும் அசுரர்களும் அமுதம் பெறுவதற்காகத் திருப்பாற்கடலைக் கடைந்த போது மந்தர மலையை மத்தாகவும், வாசுகிப் பாம்பைக் கயிருகவும் கொண்டார்கள். இரு பகுதியாரும் வேகமாகக் கடைந்த தாக்கத் தால் வேதனையுற்ற வாசுகி, ஆலகாலம் என்னும் விஷத்தைக் கக்கிற்று. அந்த விடம் அருகில் நின்றவர்களை எரித்துத் தகித்துத்

துன்புறுத்தியபோது அங்கே நின்ற திருமாலின் நிறத்தையும் நீலமாக்கிவிட்டது. விடத்தின் வேதனையைத் தாங்க முடியாது தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டபோது, அவர் சுந்தரரை அனுப்பி விடத்தை எடுப்பித்து அடக்கி உண்டு தமது கண்டத்தில் நிறுத்தி நீலகண்டராயினர். இது மற்றவர் வாழத் தாம் நஞ்சுண்ட வரலாறு. இதனை நினைவுபடுத்தும் நாள் ஏகாதசி விரத நாளாகும். விஷத்தின் வேதனை ஒழிந்தபின் தேவர்களும் அசுரர்களும் தொடர்ந்து திருப்பாற் கடலைக் கடைந்து சகல செல்வங்களையும் பெற்றுத் தம்முட் பகிர்ந்து, அங்கே எழுந்த அமுதத்தையும் உண்டு இறவா நிலை எய்தினர். அமுதம் தோன்றிய நாள் துவாதசி என்னும் பன்னிரண்டாம் நாளாகும். அது விடியற்காலை நேரமாயிருந்தது. அமுதமுண்ட தேவர்கள் ஆடிப்பாடி மகிழ்ச்சிப் பெருக்கில் பன்னிரண்டாம் நாளைப் போக்கியபின், பதின்மூன்ரும் நாள் விடிந்தது.

## வாழ்வளித்த சிவனை வழிபட்ட நாள்

தேவர்கள் தங்களுக்கு வாழ்வளித்து இறவாப் பெருமை தந்தருளிய சிவபெருமானுக்கு முன்னமேயே வணக்கஞ்செய்து வழிபட மறந்தனர். தங்கள் குற்றத்தைப் பதின்மூன்ரும் நாளில் திரயோதசி தினத்தில் உணர்ந்தனர். கருணைக்கடலாகிய நீலகண்ட மகாதேவரிடம் சென்றனர். தங்கள் குற்றத்தைப் பொறுத்தருளி ஆட்கொள்ளுமாறு இரந்து பணிந்து உருகி நின்றனர்.

வழிபாட்டுக்கு இரங்கியருளும் கருணைமூர்த்தியாகிய சிவபெருமான் தேவர்கள் கண்டுகளிக்குமாறு அம்பிகையோடு எழுந்தருளித் தமது இடப தேவரின் இரு கொம்புகளுக்கும் இடையில் தேவர்கள் காணுமாறு தமது ஒப்பில்லாத திருநடனத்தைச் செய்தருளினர். சிவபெருமான் திருநடனஞ் செய்தருளிய வேளை திரயோதசி என்னும் பதின்மூன்ரும் நாள் மாலைப்பொழுதாகும். அது

வும் ஏறக்குறைய **4-30 — 6-00** மணி எனக் கணக்கிடக்கூடிய வேளையாகும். அவ்வேளை பாபத்தைப் போக்கியவேளை எனவே பிர தோஷம் எனப்படலாயிற்று. அது ரஜனீமுக வேளை எனப்படுவது. அது மஞ்சள் வெயில் காயும் பொழுதாகும்.

தேவர்கள் இடப தேவரின் கொம்பு களுக்கு இடையில் இறைவன் திருநடனத் தைக் கண்டு அருள்பெற்றுப் பாவம் நீங்கி னூர்கள். எனவே நாம் முற்பிறவிகளிலும், இளமையிலும் செய்த பாவங்களை நீக்கி யருளுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பணிந்து பாபமன்னிப்பும் பேரருளும் பெற் றுப் பெரும்பேறெய்தி இன்புற்றுப் பெரு வாழ்வு வாழ்வதற்குப் பிரதோஷ வேளை மிகவும் மேலானதாகும். இந்த உடம்பு வசதி யாகவும் வாய்ப்பாகவும் இருக்கும்போதே நாம் வழிபாடு செய்துய்வோமாக.

## பிரதோஷ விரதத்தின் பயன்

பிரதோஷ காலத்து வழிபாடு பரார்த்த மாகவும் பயன் தருவது. நமக்காகவன்றி நம் குடும்பத்தாருக்கும் நம்மைச் சேர்ந்தவர் களுக்கும் அவ்வழிபாடு பயன்தருவதாகும். பிரதோஷ காலத்திலே நியமமாக மெய்யன் போடு சிவதரிசனம் செய்துகொண்டுவரின், கடன், வறுமை, நோய், பயம், கிலேசம், அவமிருத்து, மரணவேதனை, பாவம் என்னும் இவைகள் நீங்கும்.

சிவபெருமானுக்குரிய விசேஷ விரதமாகிய பிரதோஷத்தைப்பற்றி சகலாகம சங்கிரகம், உத்தரகாரணம், பிரமோத்தர காண்டம், சிவதருமோத்திரம் முதலிய பெரிய நூல்களில் விபரமாகக் கூறப்பட்டுள்ளது. வரதுங்கராம பாண்டிய மன்னன் தாம் பாடிய பிரமோத்தர காண்டத்தில் பிரதோஷ மகிமையை 123 செய்யுள்களில் விளக்கியுள்ளார்.

## பிரதோஷ விரதமுறை

பிரதோஷ விரதம் அநுட்டிப்போர் அன்று காலை நித்திரைவிட்டெழுந்து காலைக் கடன் கழித்து நீராடித் தூய்மையாகச் சிவாலயத்துக்குச் சென்று வழிபட்டு, அன்று நல்ல வழியில் அருள் நூல்களையும் தேவார திருவாசகங்களையும் ஓதிக்கொண்டிருத்தல் நன்று. அன்று மாலை சிவாலயத்துக்குச் சென்று சுவாமிக்கும் அம்பாளுக்கும் இயன்றவரையில் அபிடேகம் அர்ச்சனை ஆதியன செய்வித்து அலங்காரம் நிவேதனம் ஆகியவற்றுக்குத் தம்மாலானவரை உதவி, உபகரித்துத் திருவிழாப் பொலிவு காண்டல் வேண்டும். மூன்று தரமாயினும் ஐந்து தரமாயினும் திருவீதியை வலம்வந்து வணங்குதல் வேண்டும்.

சுவாமிக்குமுன் எழுந்தருளியிருக்கும் இடப தேவருக்கு அறுகம்புல் மாலையுதவி, சிவப்பு அரிசி நிவேதிக்கக் கொடுத்து, நெய் விளக்கு எரிக்கச்செய்தல் நன்று. ஆலயத்து மூலத்தானத்து எழுந்தருளியுள்ள சிவலிங்கப்

பெருமானைப் பிரதோஷ தினத்தன்று இடப தேவரின் இரு கொம்புகளுக்கு இடையிற் கண்டு வணங்குதல் முறையாகும். இறைவனை வணங்கியபின், ஓரிடத்திலிருந்து இயன்ற வரை திருவைந்தெழுத்து என்னும் பஞ்சாட்சரம் உச்சரித்துத் தானதருமஞ் செய்து வீட்டுக்கேகி உபவாசம் இருத்தல் உத்தமம். அஃதியலாதவர் பிரதோஷ காலம் கழிந்த பின் தமக்கு ஆதாரமாக ஏதேனும் சிறிதளவு உட்கொண்டு, அடுத்தநாள் காலை பாரணை செய்துகொள்ளலாம்.

**பிரதோஷ காலத்திலே செய்யத் தகாதன.**

போசனம், சயனம், ஸ்நானம், விஷ்ணு தரிசனம், எண்ணெய் தேய்த்தல், வாகன மேறல், மந்திரசெபம், நூல் படித்தல் என்பனவாம்.

## சனிப் பிரதோஷம்

சிவபெருமான் தேவர்களின் குற்றத்தை மன்னித்தருளி அவர்களுக்குத் தம் திரு நடனத் திருக்காட்சி கொடுத்தருளியமை ஒரு

சனிக்கிழமையோடு கூடிய பிரதோஷமாகை யால் சனிப்பிரதோஷம் மிக மேலானது என் பர். எனவேதான் பிரதோஷ விரதம் அநுட் டிக்கத் தொடங்குவோர் ஒரு சனிப்பிரதோ ஷத்தில் ஆரம்பித்து ஒரு சனிப்பிரதோஷத் தில் நிறுத்திக் கொள்ளுதல் வழக்கமாயிருக் கிறது. அத்தகைய சனிப் பிரதோஷமும் சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் வருவதாயின் மிகமிக நன்றாகும்.

## பிரதோஷவிரத அர்க்கியம்

பிரதோஷ விரத அர்க்கியத்தின்போது குருக்கள் ஐயா அவர்கள் கிரீச கிரிசா காந்த எனத் தொடங்கி ஓம் ஸ்ரீ சாம்பசிவாயநம: இதம் அர்க்கியம் சமர்ப்பயாமி எனக் கூறு வதன் கருத்து வருமாறு:

கிரீசரே, பார்வதி நாயகரே, கங்கை யைத் திருமுடியிலே தரித்தருளியவரே, சுப் பிரமணியப் பெருமானாகிய திருக்குமாரர் மேல் பிரீதியுடையவரே, பரமேசுவரரே அடியேனாற் கொடுக்கப்பட்ட பிரதோஷ அர்க்கியத்தை ஏற்றருள்க.

தேவநாதரே, சுகத்தைச் செய்தருள்பவரே, பகவானே, விசிட்டமான பிரதோஷ காலத்திலே அடியேனாற் கொடுக்கப்பட்ட அர்க்கியத்தை ஏற்றருளுக. அடியேன் பாவங்களைத் தீர்த்தருளுக. அடியேனால் விரும்பப்பட்ட வரங்களைத் தந்தருளுக.

பரமேசுவரரே, அடியேன் தீமை தீரவும், விரும்பிய பலன்கள் சித்திக்கவும், அடியேனாற் கொடுக்கப்பட்ட அர்க்கியத்தை ஏற்றருளுக.

பார்வதிதேவி நாயகரே, மகாதேவரே, பிரபுவே, அடியேன் கடன், நோய், பகை, வறுமை என்னும் இவற்றாலே தகிக்கப்பட்டேன். தேவரீருக்குப் பிரதோஷ அர்க்கியம் கொடுக்கிறேன். அடியேன் குறைகளை நீக்கியருளி இககசுகந் தந்தருளுவதோடு சாயுச்சிய பரசுகத்தையுந் தந்தருளுவீராக.

## சோமசூக்தப் பிரதட்சணம்

பிரதோஷ விரதத்தின்போது சிவாலயத்தை வலம் வருவதற்குப் பதிலாக சோம

சூக்தப் பிரதட்சணம் செய்தல் வேண்டும் என்பர். சோமசூக்தப் பிரதட்சணமாவது, முதலிற் சிவலிங்கப் பெருமானையும், பின் இடப தேவரையும் வணங்கிக்கொண்டு பிரதட்சணமாய்ச் சண்டேசுவரர் சந்நிதி வரை சென்று, அவரை வணங்கியபின், வந்த வழியே மீண்டு சிவலிங்கப் பெருமானையும், இடப தேவரையும் தரிசித்துக்கொண்டு வலம் வரும்போது, அபிடேக நீர்விழும் நிர்மாலியத் தொட்டியைக் கடக்காமல் திரும்பி வந்த வழியே மீண்டு சிவலிங்கப் பெருமானையும் இடப தேவரையும் வணங்குதல் முறை. ★

---

**ஆதாரம்:**


1. நாவலர் சைவவினுவிடை
2. பிரமோத்தர காண்டம்
3. சந்தியா வந்தன ரகசியம்
4. சைவசமய நோன்பு விளக்கம்
5. கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் பிரதோஷ மகிமை

உ

# திருமுறைகள்

## திருஞானசம்பந்த சுவாமிகள்

பண் — தக்கேசி

திருச்சிற்றம்பலம்

உண்ணற்கரிய நஞ்சையுண் டொருதோழந் தேவர்
விண்ணிற்பொலிய அமுதமளித்த விடைசேர் கொடி
யண்ணல்
பண்ணிற் சிறைவண் டறைபூஞ்சோலைப் புறவம்பதியாக
எண்ணிற் சிறந்த இமையோரேத்த உமையோடிருந்
தானே.

## திருநாவுக்கரசு சுவாமிகள்

பண் — பழம் பஞ்சுரம்

பருவரை யொன்று சுற்றி அரவங்கைவிட்ட
இமையோர் இரிந்து பயமாய்த்
திருநெடு மால்நிறத்தை அடுவான் விசும்பு
சுடுவா னெழுந்து விசைபோய்ப்
பெருகிட மற்றி தற்கோர் பிதிகார மொன்றை
யருளாய் பிரானே எனலும்,
அருள்கொடு மாவிடத்தை யெரியாம லுண்ட
அவனண்ட ரண்ட ரரசே.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

பண் — தக்கேசி

கோல மால்வரை மத்தென நாட்டிக்
    கோளரவு சுற்றிக் கடைந் தெழுந்த
ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய
    அமரர்கட் கருள் புரிவது கருதி
நீல மார்கடல் விடந்தனை யுண்டு
    கண்டத்தே வைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி யடைந்தேன்
    செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

## மாணிக்கவாசக சுவாமிகள் - திருவாசகம்

மாய னேமறி கடல்விடம் உண்ட
    வான வாமணி கண்டத்தெம் அமுதே
நாயி னேனுனை நினையவும் மாட்டேன்
    நமச்சி வாயவென் றுன்னடி பணியாப்
பேய னாகினும் பெருநெறி காட்டாய்
    பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ
சேய னாகிநின் றலறுவ தழகோ
    திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

## புருடோத்தம நம்பி — திருவிசைப்பா

பண் — பஞ்சமம்

அம்பலத் தருள்நடம் ஆடவேயும்
யாதுகொல் விளைவதென் றஞ்சிநெஞ்சம்
உம்பர்கள் வன்பழி யாளர் முன்னே
ஊட்டினர் நஞ்சையென் றேயுமுய்யேன்
வன்பல படையுடைப் பூதஞ்சூழ
வானவர் கணங்களை மாற்றியாங்கே
என்பெரும் பயலைமை தீரும் வண்ணம்
எழுந்தரு ளாயெங்கள் வீதியூடே.

## சேந்தனர் திருப்பல்லாண்டு

பண் — பஞ்சமம்

புரந்தான் மாலயன் பூசலிட் டோலமிட்
டின்னம் புகலரிதாய்
இரந்திரந் தழைப்பஎன் னுயிராண்ட
கோவினுக் கென்செய வல்லமென்றுங்
கரந்துங் கரவாத கற்பக னாகிக்
கரையில் கருணைக் கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருமூலநாயனர் திருமந்திரம்

சினஞ் செய்த நஞ்சுண்ட தேவர் பிரானைப்
புனஞ் செய்த நெஞ்சிடை போற்றவல் லார்க்குக்
கனஞ் செய்த வாள்நுதல் பாகனும் அங்கே
இனஞ் செய்த மான்போல் இணங்கிநின் றானே.

## நம்பியாண்டார் நம்பி - பதினொராந் திருமுறை

கறுத்தகண் டாஅண்ட வாண
    வருபுனற் கங்கை சடை
செறுத்தசிந் தாமணி யேதில்லை
    யாய் என்னைத் தீவினைகள்
ஒறுத்தல்கண் டாற்சிரி யாரோ
    பிறர்என் உறு துயரை
அறுத்தல்செய் யாவிடில் ஆர்க்கோ
    வருஞ்சொல் அரும்பழியே.

சேக்கிழார் சுவாமிகள் - பெரியபுராணம்

ஆலமே அமுதமாக உண்டு வானவர்க் களித்துக்
காலனை மார்க்கண்டர்க் காக் காய்ந்தனை அடியேற்
கின்று
ஞாலம் நின்புகழேயாக வேண்டும் நான் மறைகள்
ஏத்தும்
சீலமே ஆலவாயிற் சிவபெருமானே என்றார்.

திருச்சிற்றம்பலம்

**சுபம்.**

மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகள் காசுத்தாள்கள்போல் பெறுமதிவாய்ந்தவை. அவற்றைச் சேகரித்துப் பெறுமதிவாய்ந்த பொருள்களை வெகுமதியாகப் பெறுங்கள்.

- ★ பெரிய கட்டில் விரிப்பு
- ★ அழகிய துவாய்
- ★ அழகிய பொலித்தீன் பை
- ★ காந்திப் படமுள்ள கதர் பை
- ★ காந்தியின் சிலை
- ★ பாரதியாரின் சிலை
- ★ அறிவு நூல்கள்
- ★ நீதி நூற்கொத்து
- ★ ஆத்திசூடி ஆங்கில உரை
- ★ கொன்றை வேந்தன் ஆங்கில உரை
- ★ சுவாமிப் படங்கள்
- ★ நால்வர் படங்கள்
- ★ பெரியவர்களின் படங்கள்
- ★ அப்பியாசக் கொப்பிகள்
- ★ நீதிக் குரங்குப் பொம்மை
- ★ பனையோலைத் தொப்பி

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம். போன்: 7002